**தேனி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

( 08-12-2016 – 12-12-2016 )

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 07-12-2016

**கடந்த கால வானிலை 02-12-2016 முதல் 06-12-2016 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 13.9 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 26-32 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 19-24 |
| மேக மூட்டம் | 3-8 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 55-91 |
| காற்றின் வேகம்(கி.மீ/மணி) | 0-50 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 12-12-2016 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 08.12.16 | 09.12.16 | 10.12.16 | 11.12.16 | 12.12.16 |
|---|---|---|---|---|---|
| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0.5 | 0 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 25 | 25 | 25 | 25 | 25 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 17 | 17 | 17 | 17 | 17 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 85 | 85 | 85 | 85 | 85 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 50 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 6 | 6 |
| காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

**குறுஞ்செய்தி**

அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மேகமூட்டத்துடன் கூடிய குளிர்ந்த வானிலையே நிலவும். வரும் 10ம் தேதியன்று லேசான தூரலுக்கான வாய்ப்பு உள்ளது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : நெல் மற்றும் வாழை**

- தற்போது நிலவும் மழை மற்றும் பனி மூட்டமான சூழ்நிலை காரணமாக நெல்லில் இலை சுருட்டுப்புழு தாக்குதலுக்கு வாய்ப்புள்ளது. இதனை கட்டுபடுத்த தாவர பூச்சிகொல்லியான அசாடிரக்டீன் 0.03 சதக் கரைசலை ஏக்கருக்கு 400 மி.லி. என்ற அளவில் தெளிக்கலாம்.
- மிதமான மழையின் காரணமாக மண்ணில் உள்ள ஈரத்தை பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு உரம் மற்றும் நுண்ணூட்ங்களை வைப்பதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ளலாம்
- மக்காச்சோளப் பயிரில் தண்டுதுளைப்பானை கட்டுப்படுத்த அந்து பூச்சிகளின் நடமாட்டத்தை விளக்குப்பொறி வைத்து கண்காணிக்கவும். தேவை ஏற்படின், கார்போபியுரான் 3 ஜி ஏக்கருக்கு 6.8 கிலோ என்ற அளவில் 20 கிலோ மணலுடன் கலந்து குருத்தில் இடவும்.
- மழைகாலங்களில் தங்களது கால்நடைகளை கோமாரிநோய் தாக்குதல் ஏற்படும் மேலும் சப்பைநோய், தொண்டைஅடைப்பான் நோய் ,குடற்புழுக்கள் மற்றும் உருண்டைபுழுக்கள் தாக்குதல் காணப்படும் இதன் காரணமாக மாடுகள், கன்றுகளில் கழிச்சல், வயிற்றுப்போக்கு ஏற்படும், இதனைத்தடுக்க மருத்துவரின் ஆலோசனையின் பேரில் 3 மற்றும் 6 மாதங்களுக்கு ஒரு முறை குடற்புழுநீக்கம் செய்யவேண்டும்.